ROYAL TALKIE DISTRIBUTORS

*PRESENTS*

# THOOKU-THOOKI

58 SONGS



தூக்குதூக்கி

**ROYAL TALKIE DISTRIBUTORS**

**MADURA.**

COPY RIGHT RESERVED.

# THOOKU-THOOKI.

---

## CAST.

| | |
|---|---|
| *Sundarangadha and Thookku Thookki* | ... Sangeetham C. V. V. Pantulu. |
| *Sait and Sattampillai* | ... Clown Sundaram. |
| *Sarojini* | ... M. R. Kamalaveni. |
| *King's Daughter* | ... K. T. Rukmini. |
| *Minister's daughter* | ... Devaki Bai. |
| *Scenario-Photography and Direction* | ... R. Prakasa. |
| *Recording* | ... V. Srinivasan assisted by P. K. Vishwanathan |
| *Story-Songs and Dialogues* | ... Udumalai Narayanan. |
| *Produced under the Supervision* | ... A. Narayanan, B. A. |

---

# தூக்கு தூக்கி.

## கதைச் சுருக்கம்.

---

குந்தளதேசத்தரச குமாரன் சுந்தராங்கதன் தன் மாமனார் இல்லத்திலிருந்து மனைவியின்பால் விடைபெற்று தன் தந்தையை வந்து காணலும், தந்தையின் சொற்படி பொருள்பெற்று வியாபாரம் செய்யப் புகுதலும். அம்முறை தெரியாது கானகத்தில் அலைந்து அவ்விடத்து ஓர் முனிவரைக் கண்டு தன் வரலாற்றைத் தெரிவித்து முனிவரால் உலக நடக்கைகள் அடங்கிய ஐந்து வாக்கியங்களைப் பெற்றுக்கொண்டு அதனைப் பரீக்ஷைசெய்ய தன் தந்தைபால் அடைவதும், அவர் கோபிப்பதும், தாயைக் காணுதலும், அவர் அன்பை யறிந்தபின் சகோதரியைக் கண்டு மூன்றாவது வாக்கியத்தின் முடிவு தெரிந்து பின்பு தன் மனைவியின் மாறுபாட்டைத்தெரிந்து அவள் சூழ்ச்சியால் மரணமடைய யேதுவாயிருந்த சமயம் தோழனால் காக்கப்படுதல்.

பின்னர் உலக அனுபவங்களை அறியவேண்டி வண்ணானிடம் சென்று தன் உருமாற்றிக்கொண்டு பைத்தியக்கார வேடத்துடன் கலிங்கதேசமடைந்து பள்ளியில் வாசித்துக்கொண்டிருந்த அரச குமாரி மந்திரி குமாரி இவர்களின் சுவடி தூக்கியாக அமர்ந்து ஷை பெண்களுக்கும் சட்டாம் பிள்ளைக்கும் நடந்த காமீய சம்பிரதாயங் களுக்கு இடந்தராமல் அந்த இரண்டு பெண்களையும் தான் தந்திரத்தாலழைத்துக்கொண்டு அங்கதேசத்தரசனுடைய சேனாதிபதி உத்யோகத்திலமர்ந்து ஷை மன்னனின் மகளையும் திருமண முடித்துக்கொண்டு மூன்று பத்னிகளுடன் சந்தோஷமாய் வாழ்தல்.

சுபம்! சுபம்!!

# தூக்கு தூக்கி

## சரித்திரப் பாட்டுகள்.

கோரஸ். கடவுள் வாழ்த்து

1 ஜே ஜே ஜெய பாரதியே
திருவடிபணிந்தோமே (ஜே)
தேசுறும் சுதேசசினி
வாசசினி டோன்தழைக்கச் (ஜே)

பூஜாவிதி முறை புவிதனில் ஜ்வலிக்கப்
புனிதமருவு புகழ்ப்பொருள்வளம் செழிக்க
மாசேதவிர் மனமதியது பெருக்க
மகிமைபெறத்—தினமிது நற்—கருணைசெய் (ஜே)

2 (ஆரேசைய்யா என்ற மெட்டு)

ஆடிரூஞ்சல் அமர்ந்து நீ ரென்னோடு
ஆஹா ஹா—ப்ரம்மானந்தம் (ஆ)

அநுபல்லவி

சேடிமாரே நாமொன்று—கூடி நல்ல
சிங்காரமாகப் பதம்—பாடி
சிறந்த மலர் —சூடி
சிந்தையிலன்பை —நாடி
தினமிதுவே யொருமனதாய்
இனிதுறவே—நலமுட (ஆடிரூஞ்சல்)

3 (இராகம்-மாண்டு தாளம்-ஏகம் தர்க்கம்)

சு— கோமளமேகூர் விழிமாதரசே
கோப மேயா காதே மயிலே
குலவிடவருவாயே—மகிழ்வொடு
குலவிட வருவாயே

ச— தாமதமேதா னிதிலேதுமில்லை
தாளே னேசாமீ நீருடனே
தழுவிடவருவீரே—தயவொடு
தழுவிடவருவீரே

சு— மாமதவேத நூல்முறை யோத
மலரணைபுகுவோமே—விரி
மலரணையது புகுவோமே
சரி

ச— மாலையிலேவுயர் வானிலவேயொளிர்
காலையிலேயிள மாருதமேதரு
சோலையிலகுவோமே—மாவளர்
சோலையிலகுவோமே

4 (இராகம்-தோடி தாளம்-ஏகம்)

துரை

ச— யேவுமையொருநாளுமே—நா
னேபிரியேனே—உட
னேவருவேனே—உமதுடனே வருவேனே

என

சு— தாவியிவ்விடமே யுடலங்கே
செழுந்தேனே—நிஜமே
மொழிந்தேனே

இது

ச— பூவிலாடவர் தானெலாம்பு
கல்வதுதானே—பூவையானென்
செய்வேனே

அடி

புனிதா யிது பே தமைதா னெழியாய்
மனமே குழையாமே தே— நடை
யனமே மடமாதே (துரையே உமை)

5 (கோமளமே நீ தயவு கூறடிமானே என்ற மெட்டு)

இந்தத் தொழிலோ நமக்கு—எந்தன் தந்தையே—தாம்
சிந்தைக்குள் மகிழ்ந்துரைத்த தந்தோவிந்தையே
சொல்வீ (ரிந்தத்தொழிலோ)

அநுபல்லவி

அந்தமதிலங்கும் நம்போல் அரசர்யாருமே
நிந்தனை சொல்லாரோதான் நினைந்துபாருமே
சொல்வீ (ரிந்தத்தொழிலோ)

6 (இராகம்-சிந்துபைரவி தாளம்-சாப்பு)

அனாதைபோலே யானேனே தெய்வமே—எனை
யாதரிப்பாரில்லையோ தெய்வமே.

தொகையறு

தந்தைமொழி தான் வழாது
வந்துவகையுந் தோணுது
சிந்தைமெலிவாய் மண்மீது (அனாதைபோலே)

7 (சிறைவாய்தன்னில் அழுதாள் என்ற மெட்டு)

பல்லவி

கொண்டுவந்தேனென் தந்தையே
குணவிருந்தைக் (கொண்டு)

அநுபல்லவி

மண்டலத்தேதனிலே மதிக்கவொண்ணாததை
மாதவனருளியதை மாண்புபெற்றதைக்
(கொண்டு)

தோகையறு

கொண்டுவந்தால் தந்தை கொணராதுபோயினும்
கோபியாள் அன்னையென்றும்
கண்டிரத் ஞபரண மற்றும்பல் சீதனங்
கருதுவாள் தங்கையென்றும்
கொண்டபெண் ணும்பேதை கூற்றுவன் போலவே
கொலைசெய்து விடுவளென்றும்
நண்பன்வந் தாபத்து நாளினிற் றன்னுதவி
நல்குவானென்ற யிந்த

பாட்டு

ஐவகைவாக்கியம் அமைந்த சிலாக்கியம்
தெய்வசம்பிக்கைவைராக்கியம்
திகழும்பாக்யங் (கொண்டு)

8 (இராகம்-தோடி தாளம்-ஆதி)

அநுபல்லவி

பொன்கொணர்ந்து தந்திடிலோ
தந்தையென்றிருந்த படி
மந்திரமுனிவரெனக் கன்புடன் புகன்றமொழி

பல்லவி

நன்குணர்ந்து கொண்டேனின்று நான் இந்த
நானிலத்துளோர் நடத்தை
யானமுக்ய வாணிபத்தை (நன்கு)

9 (இராகம்-காம்போதி தாளம்-ஆதி)

சரணம்

ஆரி ரா ரோவென்று அன்பாய்த் தாலாட்டி
அருசுவையூட்டி அணிபலபூட்டி
தாரணிமேல்மிகத் தாட்சண்யங்காட்டி
சங்கடம் நீங்கத் தயவு பாராட்டிய

### பல்லவி

தாயைப்போலொரு தெய்வமுண்டோ
சாற்றுவாய் மனமே அனுதினமே (தா)

10 (இராகம்-தோடி தாளம்-ஆதி முன் தொடர்ச்சி)

நன்குணர்ந்து கொண்டேனின்று நான்—இந்த
நானிலத்துளோர் நடத்தை
யானமுக்யவாணிபத்தை (நன்கு)

### சரணம்

கொண்டுவராவிடினும் கோபியா என்னையென்றும்
விண்டபிரண்டாவதான வேதவாக்கியம் தனையின்று
கண்டுகொண்டேனே யுலகங் காசுக்குள்ளடக்கமென்று
கண்ணியமிகுஞ் சோதரியெண்ணமும் அறிவேனின்று
(நன்குணர்ந்து)

11 (இராகம்-மாண்டு தாளம்-ஏகம்)

மாருதவெம்புலி பாயுதே
வானுறையம்புலி காயுதே
சீருறுந்தேகமு மோயுதே
சேட்டுவரவை யுள்ளாயுதே (மாருத)
அந்தரங்கப் பெருங் காதலே
ஆனந்தமாகும் பூமிதிலே
சுந்திரச்சேட்டென்னும் போதிலே
சொற்சுவைபாயுது காதிலே (அந்தரங்க)

12 (சீமை சிலுக்குகாரி என்ற மெட்டு)

இருங்கவாங்க சேட்டே—ஸோப்பா
இதனையென்பக்க மிழுத்துப்போட்டே (இருங்க)
தரங்கொண்ட உங்கள் கூட்டே—விட்டுத்
தனித்திருக்கவே மாட்டேன் மாட்டேன் (இருங்க)

(தாளத்துடன் வசனம்)

பாழாப்போன மன்பத பாணம்
பட்டுப்பட்டெனவே விடுக்க—இந்தப்
பாவைமேலது பாயுமுன்னமே
பக்குவஞ் செய்து கொடுக்க

நல்ல

கேளாருஞ்சொல்லி கொஞ்சிக் கொஞ்சிக்
குமரிமடியிலிருக்க—வந்தீர்
குணத்தில் தனத்தில் மிகுந்தவா யினிக்
குருவில்லா வித்தை படிக்க பக்கத்தில் (இருங்க)
ஏழெட்டு நாளாக நீங்க
எங்கேதாம் போயிருந்தீங்க சேட்டே (ஏழெட்டு)

நான்

ஆளுவிட்டுப் பார்த்துந்தாங்க—எங்கும்
அம்படலேண்ணு சொன்னுங்க இந்த (ஏழெட்டு)

(தாளத்துடன் வசனம்)

காத்திருந்தெதிர் பார்த்துப் படுத்தெங்
கண்ணுக்கு நித்திரைபிடிக்கலே—இன்று
காலையிலிருந் திதுவரைக்குமே
காபி ஓவல் ஒண்ணுங் குடிக்கலே
சோத்துப்பக்கம் போனுவாந்தி
சுத்தமாகப் பிடிக்கலே
சுந்தரா நீ ரிங்கே வந்ததின் பிறகு
சும்மாயிருக்கவும் முடியலே (சேட்டே ஏழெட்டு)

13 (மேரே மௌலபுலா என்ற மெட்டு)

மூக்குமேலே கம்மல் ஹே
முகத்துமேலே காப்பு ஹே
நாக்குமேலே புலாக்கு ஹே—இப்பொ
நம்மள் உன் கீ போட்றேன் ஹே
ஷோக்கீ உன் கீ மேலே ஹே (மூக்கு)
அகமேரே பியாரி எல்லாம் உன்கித்தா

## பல்லவி

பியாரீ நம் கீ மஜா—யிப்போ
உன் கீ மேலே (பியாரி)

14 (ஷீ—மெட்டு)

அகப்பியாரி நிம்மள் வாய்லே
துன்றத் வாங்கிவர்ரான்—கைலே
தூங்கி வர்ரான்
குஞ்சரலாடு கோதும் பிஸ்கோத்
குலோப்புஜான் பால்கோவா ஷர்பத்
பஞ்சுமிட்டாய் நெய்பர்பி நிர்வாத்
உன்கீ கைகீ கால்லே துன்றத்
வாங்கிவர் ரான்—கைலே
தூங்கிவர் ரான்
ஜிலோப்பி வாங்கிபாத்து
ஜீருதோசை பிஸ்கோத்து
குலோப்ஜான் பொட்டோபாத்து உன்கி
கொண்டு வந்தேன் சேட்டு எல்லாம்
வாங்கிவந்தான்—கைலே
தூங்கி வந்தான் (அகப்பியாரி)

15 (பாட்டு—தர்க்கம் சல்லாபமா என்ற மெட்டு)

சரோ— என்னுசைக் காதலா வீ
ணேனேகாலம் போகுது

சேட்— அன்னமே உன்மேலே
ஆசைநம்பி இருக்குது

சரோ— கன்னல்வேள் கணையினுலே
காமலகிரி மீறுது

சேட்— கடவாய்க்கு மேலே சேட்டு
கடிச்சி முத்தங்கொடுக்குது

(தாளத்துடன் வசனம்)

சரோ— நல்லது தங்களின் மேலே—அன்பு
நாளும் மாருது பூ மேலே
நிம்மள்

சேட்— ஜல்தி அத்கி போவணுமில்லே நிம்மள்
தம்மள் நம்கி வர்ரதில்லே

சரோ— சரி வா

சேட்— ஊம்

பாட்டு

ச. சே.— சந்தோஷந் தானிருபேர்கள்
சலாபமதே ப்ரம்மானந்தம் (என்னுசை)

16 (தர்க்கம் நாமாவளி என்ற மெட்டு)

சரோ— ராம ராமஜெய ராஜா ராம்
ராம ராம ஜெய சீத்தாராம்

சேட்— ராம ராம ஜெய சைத்தாராம்
சாது கடைக்கி போக மாட்டாராம்
ராம ராமஜெய ராஜா ராம்
சாது சேட்டைப் போட்டு உதைக்கிருராம்

17. (இராகம்-சிந்துபைரவி தாளம்-ஏகம்)

## பல்லவி.

காலந்தான் காலந்தான் இது (காலந்தான்)
கருத்தொடு முனியுரைத்திட்டமொழி
சீலந்தான் சீலந்தான்

## சரணம்.

1. ஞாலமீதில் ராஜ குடும்ப
நாயகியாயிருக்க—அந்த
நான் முகன்படைத்துமிந்த நாரிக்கப் பதங்கிடைக்காமலோர்
காலிப்பயலின் மீதிலாசை காட்டுருள் கற்பையொழிக்க—
இந்தக்
கருமத்தைக் கண்ணால் பார்த்தயானிக்
கட்டையைச் சுமந்திருக்க (காலந்தான்)

2. குடும்பப் பெண்கள் சோரமார்க்கக்
கொள்கை கொண்டபோது—இனி
கூத்தியர்களுக்கவ்வேலை
குவலயத்தினிலேது—இந்த
தடிச்சிறுக்கியாலே பெரிய
சந்திக்கபவாது—வந்து
சாருமென்றுணர்ந்தயானும்
தற்கொலை செய்யாதிருக்கும் (காலந்தான்)

## தோகையறு.

தோலிருக்கச் சுளைவிழுங்கும்
சோரன்கதையைப் பெரியோர் சொன்னதொக்கத்
தாலிகட்டி மணமுடித்தோன்
சந்நியாசியாய்ப் படுத்துந் தானிருக்கச்
சீலமிகுந்த தமிழ்பேசத் தெரியாத
சேட்டொருவன் தினஞ்சுகிக்க
வேலைகெட்டுயான்பார்த்து
விசனப்பட்டு மனம் கொதிக்கத் (காலந்தான்)

18. மனமே — மாதவரை மொழி
மாநிலமீதில் — மெய்யானதே
இகமாய்கையிலே — பகைகோடியிலே
இனிதேபெற — நீ நினையாதே
சுகமேதருநேர் — வழிமேவிடவே
துணிவுறுதலையே — மறவாதே (மனமே)

தெம்மாங்கு:—

19. பழனிமலை வேலனடி — பைத்தியக்காரக் கோலனடி
கலிகால காட்சியெல்லாங் — காணவந்த சீலனடி
காதகத்தொழிலே — வெறுத்தம
காதவச்சிவ யோகர் மொய்த்திடு (பழனிமலை)

வண்ணத்தி:—

20. (மதிச்சியத்திலே என்ற மெட்டு.)

நான்

வடமதுரையில் குடியிருக்கிறது — ஏ ஐயா
ஆத்தி
அம்மா (வ)

நான்

வளவு வளவா அழுக்கெடுக்கிறது
வந்தெடுக்கிறது
போயெடுக்கிறது — அதை
விடிய விடிய வெள்ளாவைக்கிறது — எங்க
வீட்டுக்காரன் கூட நானும் வெளுக்கப்போகிறது

(தாளத்துடன் வசனம்)

கனத்தமோளி கட்டிப்போட்டுக்காரிக்
கழுதைமேலே ஏத்திகிட்டு
கம்மாக் கரைக்குப் போறேஞ் சுருக்கக்
கஞ்சியைக் கிஞ்சியைக் கொண்டுகிட்டு
எனக்குப் பின்னேவாடி யின்னு
என்னையுங் கூப்பிட்டுச் சொல்லிப்பிட்டு

எம்பிள்ளே சின்ன ராஜாக் குட்டியை
எடுத்துக் கக்கத்தில் வச்சிக்கிட்டு

வாண்ணு

எங்க வண்ணுங் கூடயிருள வண்ணு அந்த
எல்லா வண்ணுங்கூட யெங்க வண்ணு
கந்தவண்ணுங் காளி வண்ணு
கருப்ப வண்ணுங் காசிவண்ணு
ஆத்துக்குப் போனுக அழுக்குத் துவைக்க
சோத்தைக் கொண்டுபோயி ஊத்தனுஞ் சுருக்க
சொக்கா கிக்கா தோவத்தி சேலே
துப்பட்டி கிப்பட்டி எல்லாம் பால்போல
பக்குவமாகிட நீலத்தினுலே
பாங்குடன் நனேத்து பாறுங்கல் மேலே
அடிக்கணும் —தண்ணி
வடிக்கணும் —ஈரம்
ஒணத்தணும் —பின்னெ
எடுக்கணும் —அதை
மடிக்கணும் —கொண்டு
கொடுக்கணும் போய் (வடமதுரை)

## கந்தார்த்தம்.

21. ஆண்:— இன்னேரமட்டுமே நீ அடிடி டிடி
யேண்டி குட்டி யெங்கே போனே
சொன்னுலுங் கேட்பதில்லே
சொர்ணெகெட்ட பயவமளே சோ ஹை
ஹா ஹா ஹை ஹை

22. பேண்:— வெள்ளாவித் தீ யெரிக்க அடட டட
மேக்குமந்தை யோரத்திலே
சுள்ளி வெட்டிப் போட்டுப் போட்டுச்
சோறுக்கிக் கொண்டுவந்தேன் சோ
ஆ சோ
ஆ ஹை

23. ஆண்:— சோருக்கிக் கொண்டுவர
நேரமித்தனையோ —யேண்டி
தோதுகத்தனையா —நான்
சும்மாயிருக்கப் போக நீயும் சுளுப்புக் காட்டுருயா றைை

24. பெண்:— போகட்டுமென்று பொருத்து —பார்க்கப்
போகுருய் மேலே —பெரிய
புலிதனைப்போலே —உன்
போக்கிரித்தனம் தெரியும் பேசாதே
புருஷனைப்போலே

(எங்கள் குடும்பம் பெரிசு என்ற மெட்டு.)

25. அக்காடீ இவனுரு நான்
அறியவேணும் ஊரும் பேரும்
பக்குவமாயதைக் கூறு இவனைப்
பார்க்கவே பசிமாறும் மாறும் (அக்காடீ)

26. எனக்கிவன் தெரியாது நான்
என்னென்று சொல்வேனிப்போது தங்கா (எனக்கிவ)
மனத்திலே துஞ்சூதும் வாது
வஞ்சமொன்றுங் கிடையாதிப்போது (எனக்கு)

இந்தப் பாடலை மடக்கிப் பாடினுல் போருள் வரும்.

27. (சொல்லப்போனுலுனக்குங் கோபந்தான் என்றமெட்டு)

தர்க்கம்.

ம. கு:— எங்கே வந்தாய் நீ யாரு சொல்லப்பா
இல்லாவிட்டால் வெளியே செல்லப்பா ஊ அடிப்பேன்
(எங்கே வந்தாய்)

அ. கு:— தங்கா நீ யவனிடத்தில் சரசம் வச்சிக்காதே
தள்ளியே நில்லு கைதொடாதே-சீ-சீ (தள்ளியே)
பங்கேருகன்படைப்பில்
பாரிலே யிந்தச் சொரூபம்—பார்க்கப்
பரவச முண்டாகுதே—யிருக்கட்டும்பொறு (எங்கே)

தாளத்துடன் வசனம்.

ம. கு:— எம்பா உனக்கு
அப்பா அம்மா அண்ண தம்பி
அல்லாமிருக்கிறார்களா—அல்லாமிருக்கிறாகா

அ. கு:— இப்படியே பேசிக்கொண்டிருந்தால்
இதில் என்னடா உனக்கு லாபம்
இனிமேல் வருங்கோபம்

ம. கு:— அக்காயிடத்தில் என்னடா பேச்சி
அப்புறம் விலகிப் போடா—சீ
அறிவது கெட்ட மூடா
நா அடிப்பேன்
நா அழுவேன்

28. (மாமணிமாகதசுபகர என்ற மெட்டு.)

பல்லவி.

தேசிகநாதரேயும்—திருவடிபணிந்தோமே
சிறுமியர்யாமே

அநுபல்லவி.

ஆசிபெறவே காணிக்கை
ஆதிகொண்டு வந்தோம்
நேசமிகுந்தங்களன்பு
நேர்ந்திடச் சிறந்தோம் (தேசிகநாதரே)

29. தர்க்கம்.

ம. கு:— என்னவேணுஞ் சொல்லுவீரைய்யா சட்டாம்பிள்ளையே
ஏதுவேணுஞ் சொல்லு வீரைய்யா உமக்கு (என்ன)

30. ச. பி:—இன்னதென்று நானுஞ் சொல்லவா
என்குஞ்சரங்காள்
இனியதென்று நானுஞ் சொல்லவா

தாளத்துடன் வசனம்.

அ. கு:— சொல்லாவிட்டால் தெரியுமா
ச. பி:— சும்மாசொல்லவும் முடியுமா

31 ம. கு:—கங்கணங்கை காப்புவேணுமாயேஞ் சட்டாம் பிள்ளையே

கல்லுமோதிரங் கடுக்கன் வேணுமா

32. அ. கு:—பைக்கு மோட்டார்காருவேணுமா ஆகாயந்தன்னில் பறக்கும் ஏரோப்ளேனும் வேணுமா.

தாளத்துடன் வசனம்.

ச. பி:— வேண்டாமே கொண்டுபோங்க

ம. கு:— விஷயம் ஒண்ணும் புரியல்லீங்க

ச. பி:— வினயமாகவே நினைந்துபாருங்க

பாட்டு.

ம. கு:— விஷயத்தை வெளியாக்கிப் போடுங்கோ ஐயா உங்களின்
விருபத்தை வெளியாக்கிப் போடுங்கோ.

33. என்னை நீங்களே விவாகமே செய்துகொள்ள
எண்ணங் கொண்டதுண்ட மோகமே.

34. (காவடிச்சிந்து மெட்டு)

தர்க்கம்.

அ. கு:— குருவென்ற மரியாதையினியிங்கு நடவாது
பிள்ளையே—சட்டாம்பிள்ளையே—நீர்
கொண்டமோகமது நன்று தானுகாது
குற்றமே—யிவைமுற்றுமே.

35. ஷை மெட்டு.

ச. பிள்ளை:—மரியாதை யறியாத எரிகாம வெறியாலே
வாடுறேன்—கால் தள்ளாடுறேன்—இன்று
வந்திணங்க உங்களந்தரங்கப்ரீதி
வேணுமே—மணம் பூணுமே.

36. ஷை மெட்டு.

ம. கு:— மிதமிஞ்சி வருகின்ற
பதரென்று நினைமுன்பு
கண்டிலோம்—உளங்

கொண்டிலோம்—நல்ல
மேன்மையான குணப்
பான்மையே உம்மிடத்
தில்லையே—யிது தொல்லையே.

37. (சித்தானந்தாகுஹா என்ற மெட்டு)

தர்க்கம்.

அ. கு.— கண்டாற் கொல்லும்விஷம் பெண்காமம் அந்தோ பொல்லாது
கற்றும்தேருத சட்டாம் பிள்ளையே—சட்டாம் பிள்ளையே
கடிமண நினைவதை விடு விடு— (கண்டாற்)
கொண்டாட்டமாகவந்து—குருமுறையைக்கடந்து
குற்றமே மெத்தவும் (கண்டாற்)

38. ஷை மெட்டு

ச. பி.— பெண்டாட்டியாவதற்குப்
பிடிவாதம் செய்வீரானல்
ப்ரம்மஹத்தி தோஷந்தான் சாருமே
உம்மைச் சாருமே
உங்களைச் சாறுமே
பிசகல இதுநிஜ மறிகுவீர் (பெண்டாட்டி)

39. ஷை மெட்டு

ம. கு:— பெற்ருேர் கடுத்தஸ்தானம்பெற்ருேய் உமக்கு மிந்தப்
பித்தானதாமோ சட்டாம் பிள்ளையே சட்டாம்பிள்ளையே
பெருமையை விடுவது முறையல (பெற்ருேர்)

40. (ஞானத்தங்கமே என்ற மெட்டு)

மன்மத பாணமடீ—என்
மார்பைத் துளைக்குதடீ
என்னுயிரைப் போக்குதடீ—ராஜக்குட்டிகளா ரஸ
குல்ல லட்டுகளா—நீங்க
ரகசியத்தைச் சொல்லுங்கடீ ராஜகுட்டிகளா.

41. (மந்தையிலெ மாடு மேய்க்கும் என்ற மெட்டு)
பூப்போட்டுக் கும்பிடுவேன்
பொடவை தொவச்சுப் போடுவேன்
சோப்புப்போட்டு உடம்பையெல்லாம்
சுத்தம்செய்து விட்டிடுவேன்—நானே
அடி
சுந்தரிகாள் உங்களுக்குத்தானே.

42. இராகம். பியாக்

பல்லவி

மோசம்வந்து சேர்ந்தது உயிருக்கு (மோசம்வந்து)
முழு
முட்டாள் பையன் பெற்ற
சட்டாம்பிள்ளையாலே (மோசம்)

சரணம்.

வாசித்த காணிக்கை—வழங்க தம் முன்னாலே
வந்தோரைப்போவென் மகன்பாலென்றதாலே
(மோசம்)

(வண்ணான்வந்தானே என்ற மெட்டு.)

43. காணிக்கை கொண்டுவந்து—உங்கள் மகன்
கால்முன்வைத்து விழுந்து
பேணிக்கொள்ளென்று பெண் பிள்ளைகள் கூற
மானங்கெட்ட சின்ன வாத்தியங்நேரம்
மையலதுமிகுந்து—மதிமறந்து
அடிபணிந்து—எழுந்து
மாலையிடத்துணிந்து
கட்டாயம் செய்தனன் ஐயா—ஐயா

வாத்:— அந்த காமாட்டி மகனைபயா

தூ. தூ:— ஆமா ஆமா

வாத்:— அதற்குப் பின்னாலே—நடந்ததை
அறியச் சொல்லுமடா

தூ. தூ:— இதமான நியாயத்தை யெடுத்தவர் சொல்ல
உதவாதென்றுன்பிள்ளை—உயிர்விடச்சொல்ல
போனவனைத் தடுத்து
சத்யங் கொடுத்து—மணமுடித்துக்கொள்வோமென
பூவையர் சம்மதித்துக்
காளிகோவில் தோப்பிற்கின்றிரா—இன்றிரா—அவர்
கால்நடையாய் போகவும் போரார்—போவார்.
வெளியேறிப்போகிற விபரத்தினுண்மை
விளக்கிச் சொன்னேன்—கண்ணை
விழித்துக்கொள் நன்மை—நானே
போய்வாரேனே—வாத்தியாரே
நமஸ்காரந்தானே.

44. (எதிகதி நாகு என்ற மெட்டு.)

அ. கு:— ஐயோ என் செய்வோம் எவ்வாறுய்வோம் (ஐயோ)
தெய்வ சோதனையிதோ—தெரியவில்லையே
தியங்கியே மனது மிகவும் அலைந்துநொந்தோம்(ஐயோ)

45. ம. கு:—இந்த மோசம் போவோமென்று
எண்ணவில்லையே அக்கா (இந்த)
வந்திருப்பேனென்ற சின்ன
வாத்திவல்லையே (இந்த)

46. (ஏருதமலையேற என்ற மெட்டு.)

தூ. தூ:— ஏருத மலையேற ஈனுக்கிடாரிரெண்டு
சீராடி நிற்குதைய்யோ
செந்தில் வடிவேலவனே.

47. (கட்டபொம்மு மெட்டு.)

தூ. தூ:— பாலும் பழமுண்டு பஞ்சணைமேல்
பாங்குடனே - நிதம் தூங்கும் மக்காள்
காலவித்யாசத்தால்—காட்டினிலே
கஷ்டப்படவும் விதி விதியோ—ஐயோ
கடவுள் செய்த சதி சதியோ.

48 (தங்கந்தையலாளே மெட்டு)

சாப்பி யிட்லி தோசை தின்று
கனமான குட்டி ரெண்டு
ராப்பட்டினி யிருந்து
ராமாயணம் படிக்குதைய்யோ
தண்டட்டீக்கி மேலட்டீக்கித்
தங்கந்தைய்யலாளே—ஆத்துத் தண்ணி போரவேகத் [துக்குப்
பொன்னுங்குயிலாளே

49. (தண்டாமறைமுகனே என்ற மெட்டு.)

பாடுபட்ட சட்டாம்பிள்ளே
பார்ப்பான் அதிர்ஷ்டத்திலே
ஏடுதூக்கி பேருக்கல்லோ
எழுந்ததைய்யா பஸ்டுப் பிரைஸ்
மங்கம்மா சோலே மலேமேலே
மதுரைக்குப் போகும் வழிமேலே.

50. (தங்கமெதில்லாலே மெட்டு)

கட்டைவண்டி முட்டி யிந்தப்
பொட்டை மாட்டை ரெண்டுங் கட்டி
தட்டி ஓட்ட சவுக்கில்லாமல்—தங்கமேதில்லாலே
தவிக்குறுனும் தூக்கு தூக்கி—பொன்னுமேதில்லாலே

51. (வாங்க வாங்களடி என்ற மெட்டு)

தூ. தூ:— சாயம் வெளுத்துப் போச்சுக் குட்டிகளா
உங்க
சங்கதியெல்லாந் தெறியவிட்டிங்களா
நியாயமின்றி வெளியேவந்து கெட்டீங்களா
சுத்த
நாண்யத்தையே விடுத்த மட்டிகளா

52. ஷை மெட்டு

ம. கு:— அக்கா பாரடீ யித் தூக்குத் தூக்கி—திட்டி
அடிக்கடி பேசுகிறுன் தூக்கு-தூக்கி

அலக்ஷியமாய்த் தானே
அறிவுகெட்ட கேனே
உலகில் பழிவீணே
உதித்திட வந்தானே
உன்னாலே நாங்கெட்டேண்டீ
அக்காடீயக்கா
ஊதாரிப் பட்டம்பெற (அக்கா)

53 (வாங்க வாங்களடி மெட்டு)

அ. கு:— போனதெல்லாம் போகட்டும்பா தூக்குத் தூக்கி—நல்ல
புத்திவந்துவிட்டதப்பா தூக்குத் தூக்கி
ஆனதெல்லாம் ஆச்சி—அதைப்பற்றி யென்ன பேச்சி
மானங்கெட்டுப்போச்சி—மதிப்புக்கெட ஏச்சி
வாங்கிக்கொண்டோம் யாங்களே—சும்மா
வளர்க்கவேண்டாம் நீங்களே.

54. (கூடைமுறங் கட்டுவோம் என்ற மெட்டு)

தூ. தூ:— ஏழை பாப்பான் பையன் வேணுமா—அல்ல
தேடு தூக்கும் தூக்கி தயை வேணுமா
எப்படித் தானிஷ்டம்—இயப்புமுங்கள் கஷ்டம்
அடி
எங்ககூட வந்தீரானால்—கடவுள்
எப்படியும் தீர்ப்பாரடீ.

55. (தாராபுராக்குயிலே தங்கீவா என்ற மெட்டு)

தூ. தூ:— வாரேனென்ற சட்டாம்பிள்ளை வரட்டுமா
அல்லது
வந்திருக்கும் கிருக்கனே யிருக்கட்டுமா
பாரினில் கல்யாணம் பாப்பாரைய்யருக்கா
சிலேட்டுப்
பலகை தூக்கும் பைத்யக்காரப் பையனுக்கா
போனதெல்லாம் போகட்டும் தள்ளிப்போடுங்கோ
உங்கள்
புருஷன் தூக்குத் தூக்கி யென்று புகலுங்கோ

56. (வாங்க வாங்களடி என்ற மெட்டு)

தூ. தூ:— காண்டில் ஓடும்வண்டி சென்னைவண்டி
அஃகாருவண்டி மோட்டார்
காருவண்டி கண்டேன் யான் பின்னையுமொண்டி

கட்டைவண்டி—குதிரை
கட்டும் வண்டி—ரெண்டு
பொட்டிவண்டி—ஆக
எட்டு வண்டி—நாமும்
ஏறும் வண்டி இனிமேல் உங்களையும்
ஏத்தும்வண்டி—காசில்லாமல்
ஒன்றுக்குமஞ்சாத வண்டி.

57. (இந்துஸ்தான் டான்ஸ் மெட்டு.)

தர்க்கம்.

1-வது பெண்:— சுந்திரா நீ மருவவே வருவாயே பெணையே
சுந்த:— சுந்தரமாதரேசுகம் பெறவா நீ ரினியே
2-வது பெண்:— என்னிடமென்றும் இருப்பதும் நன்று
சுந்த:— அன்னமே யுன்னிடமே
ஆசைமிகவே யிருக்கும்
[illegible]-வது பெண்:— என்ன சொன்னீர் கோவே
ஏழை யெங்குபோவேன்

பாட்டு.

(நிச்சயமாய்த் தீர்க்கக் கடனுனக்கு வழி என்ற மெட்டு.)

58. இராகம். தன்யாசி.

பல்லவி.

சுந்த:— மூவர்களைத் தேவியராய்—மூதுலகில் கொண்டவற்கு
மோக்ஷங் கிடைப்பது மெய்யா—மனமே (மூவர்)

அநுபல்லவி.

பாவை யொருத்தியாலே பாவியானும் பட்டபாடு
—என்
ஆவியுள்ளவரைக்கும் அகத்தில் மறைபடாது (மூவர்)

சரணம்.

என்னிடத்தில் வாருமென்றே யிவள் பிடித்திழுக்கிறாள்
இடையிலொருத்தி வந்திங் கிடித்துக் கை பிடிக்கிறாள்
தன்னிடத்திலிருக்க அத்தையல் வந்தழைக்கிறாள்
சர்வேஸ்வரா யிதற்கோர்
தந்திரம் சொல்லுமின்னாள். (மூவரை)

சுபம்! சுபம்!! சுபம்!!

கீழ்கண்ட படங்களும் நம்மிடம் கிடைக்கும்.

1. T. P. ராஜலெக்ஷிமி, V. A. Chellappa ஆக்ட் செய்த "கோவலன்".

2. K. R. சாரதாம்பாள் ஆக்ட் செய்த "திரௌபதி வஸ்திராஹரணம்".

3. ஸ்ரீநிவாஸ கல்யாணம்.

*For particulars please apply to:—*

ROYAL TALKIE DISTRIBUTORS,

120, South Masi St.,

MADURA.

# Ready for Release Tamil Talkie









# Thooku- Thooki

Rajeswari Press, Madura:—35.